**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்,**
**முன்னிலை : Ms.மதிவதனி வணங்காமுடி., B.A.,L.L.M.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்**
2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 ம் நாள் செவ்வாய்கிழமை
**இ.ம.எண்.5/2024**
**அ.வ.எண்.448/2014**

முருசேகன் ...மனுதாரர்/வாதி

..எதிராக..

1. நாச்சிமுத்து
2. பழனிச்சாமி
3. N.சசிகுமார்
4. G.நல்லசிவம் .... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 11.03.2025 அன்று இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் திரு.K.பன்னீர்செல்வம்.,B.A.B.L., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.S.T.சேகர்.,B.Sc.,L.L.B., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 4 ம் பிரதிவாதி தரப்பில் K.பாலசந்தர்.,B.Com.,L.L.B., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், மனு எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**" உத்தரவு"**

மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26, விதி 9, மற்றும் பிரிவு 151 ன் படி வழக்கு சொத்துக்களை நில அளவையர் மூலம் அளவீடு செய்து மனுதாரரின் பூமியின் கிழபுற எல்லையை நிர்ணயம் செய்து அதில் கிழகோட்டில் எதிர்மனுதாரர்கள் கம்பி வேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ள பூமியின் விஸ்தீரணத்தை குறித்து அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2025.03.11 17:40:44 +0530

**1. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர் தரப்பில், 1, 2 எதிர்மனுதாரர்கள் தங்கள் பூமியில் மேல்கோட்டில் அதாவது மனுதாரர் பூமிக்கு கிழகோட்டில் 25 செண்ட் பூமியை 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு கடந்த 24.01.2023 தேதியில் கிரையம் கொடுத்து அதை வைத்துக் கொண்டு மனுதாரர் மருத்துவமனையில் இருந்து கடந்த 10.09.2023 தேதியில் மனுதாரரின் பூமியின் கிழகோட்டு 10 அடி அகல பூமியை ஆக்கிரமித்து தங்கள் கிரைய பூமியுடன் சேர்த்து கொண்டதுடன் கம்பிவேலியும் அமைத்துக் கொண்டனர் என்றும், அதனால் மனுதாரரின் பூமியின் கிழகோட்டில் 10 அடி அகல பூமி எதிர்மனுதாரர்களின் பூமியுடன் சேர்த்து அவர்களது அனுபவத்தில் உள்ளது என்றும், மேற்படி பூமியை எதிர்மனுதாரர்கள் மனுதாரர் சுவாதீனம் கொடுக்க வேண்டியுள்ளது என்றும், அதுகுறித்து வழக்குரையை திருத்தி பரிகாரம் கேட்டுள்ளதாகவும், மேற்படி வீதம் எதிர்மனுதாரர்கள், மனுதாரர் பூமியை ஆக்கிரமித்து கம்பிவேலி அமைந்துள்ளதை இந்நீதிமன்றத்திற்கு நிரூபணம் செய்ய வேண்டியுள்ளது என்றும், எனவே நீதிமன்ற ஆணையர் நியமனம் வேண்டி அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:– (1, 2 எதிர்மனுதாரர்கள் 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையையே ஏற்றுக் கொள்ளப்பட்டது)**

எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் மீண்டும் தாவாச் சொத்துக்களை அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரரின் பூமியையும் ஆக்கிரமித்து கம்பி வேலி போட எவ்வித முகாந்திரமும் கிடையாது என்றும், மனுதாரர் தான் எதிர்மனுதாரர்கள்



MATHIVATHANI VANANGAMUDI Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI Date: 2025.03.11 17:40:49 +0530

பூமியை அபகரிக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் செயல்பட்டு வருகிறார் என்றும், மனுதாரர் பாத்தியம் இல்லாத பூமியை தனக்கு பாத்தியம் என்று சொல்லி மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மொத்தம் பு.ஏ.4.31 2/3 ல் விற்பனை செய்தது பு.ஏ.2.10 போக பாக்கி பூமி பு.ஏ.2.21 2/3 விஸ்தீரணம் தான் பாத்தியப்பட்டதாகும் என்றும், மேற்படி விவரத்தினை மறைத்து பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு ஏற்கனவே மனுச் சொத்தினை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ள நிலையில் தற்போது வழக்கினை இழுத்தடிக்கும் நோக்கில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டன.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதா?

**5. தீர்வு:-**

இந்நீதிமன்றம் மனுதாரர்/வாதி தரப்பு மனுவினை பரிசீலனை செய்கையில், மனு சொத்துக்களை பார்வையிட்டு, நிலஅளவையர் மூலம் அளவீடு செய்து மனுதாரர் பூமியின் கிழபுற பூமியை நிர்ணயம் செய்து அதில் கிழக்கோட்டில் எதிர்மனுதாரர்கள் கம்பிவேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதில், மனுதாரர் பூமியின் விஸ்தீரணத்தை குறித்து அறிக்கை வரைபடம் தாக்கல் செய்ய வேண்டி ஆணையர் நியமனம் கோரப்பட்டுள்ளது.

MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2025.03.11 17:40:54 +0530

5.1. மனுதாரர்/வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்து விசாரணை நிலுவையில் உள்ளது. மனுதாரருக்கு பு.ஏ.2.37 விஸ்தீரண பூமி ரீ.ச.எண்.299/2 ல், பாத்தியப்பட்டது என்றும், அதன் கிழபுறம் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட ரீ.ச.எண்.299/3 பூமி உள்ளது என்றும், 1, 2 எதிர்மனுதார்கள் அவர்களது பூமியின் மேற்கோட்டில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 10 அடி அகல பூமியை ஆக்கிரமித்து 25 செண்ட் பூமியை 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளதாகவும், அதில் கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி ஆக்கிரமிப்பினை நிர்ணயம் செய்ய இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் என மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

5.2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், ஏற்கனவே ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா சொத்துக்கள் அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த எதிர்மனுதாரர்கள் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும், மனுதாரருக்கு அவர் விற்பனை செய்தது போக 2 ஏக்கர் 21 2/3 விஸ்தீரண பூமி தான் பாத்தியப்பட்டது என்றும், இந்த மனு வழக்கினை காலதாமதம் செய்யும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், வாதிடப்பட்டது.

5.3. இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்கையில், இந்த வழக்கு விளம்புகை மட்டும் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே இ.ம.எண்.1399/2014 என்ற மனுவில் தாவா சொத்துக்களின் இயற்கை அமைப்புகளை பார்வையிட வேண்டி மனு தாக்கல் செய்து அதில், நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா சொத்துக்களை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார்.



MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2025.03.11 17:40:59 +0530

1, 2 எதிர்மனுதாரர்கள் அவர்கள் பூமியின் மேல்கோட்டில், வாதி பூமியின் கிழகோட்டில், 25 செண்ட் பூமியை 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு 24.01.2023 தேதியில் கிரையம் கொடுத்துள்ளனர் என்றும், 10.09.2023 தேதியில் வாதி பூமியின் கிழக்கோட்டில் 10 அடி அகல பூமியை ஆக்கிரமித்து அவர்கள் பூமியுடன் சேர்த்து கம்பிவேலி அமைத்துள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தாவா சொத்து வாதிக்கு, தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரத்துடன் சேர்த்து தாவாத் சொத்தின் கிழக்கோட்டில் ஏபி என்ற பகுதியை ஆக்கிரமித்து கம்பிவேலி அமைக்கக்கூடாதென நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. 10.09.2023 தேதியில் கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் சொல்லும் நிலையில் அதுகுறித்து வழக்கு பரிகாரம் மனுதாரர்/வாதியால் திருத்தம் செய்யப்படவில்லை.

மனுதாரர் இவ்வழக்கினை விளம்புகை மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ள நிலையில் மனு சொத்தை அளவீடு செய்யாமல் வழக்கு பரிகாரத்தை தீர்மானிக்க இயலாது என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்நிலையில் மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. நீதிமன்ற ஆணையராக திருமதி.மேனகா.,B.A.,B.L, வழக்கறிஞர் அவர்கள் நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் நில அளவையருடன் பார்வையிட்டு மனுதாரர் பூமியின் கிழபுற எல்லையை நிர்ணயம் செய்து, கிழகோட்டில் எதிர்மனுதாரர்கள் கம்பிவேலி அமைத்து ஆக்கிரமிப்பு

MATHIVATHANI VANANGAMUDI Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI Date: 2025.03.11 17:41:04 +0530

செய்துள்ளாக சொல்லும் மனுதாரர் பூமியின் விஸ்தீரணத்தை, அளவீடு செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இருதரப்பினர்களுக்கும் உரிய அறிவிப்பு கொடுத்து தாவா சொத்தை நிலஅளவையருடன் அளந்து அத்து நிர்ணயம் செய்யவேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் நியமனத்தொகையாக ரூ.10,000/- நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி தொகையை மனுதாரர் நீதிமன்ற ஆணையருக்கு செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யும் நாள்: 21.04.2025

என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்ட பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஆண்டு மார்ச் மாதம் 11ம் தேதி என்னால் அவையறியப் பகரப்பட்டது.

MATHIVATHANI VANANGAMUDI Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI Date: 2025.03.11 17:41:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி
தாராபுரம்.

**<u>மனுதாரர் & எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி & சான்றாவணங்கள்</u> – இல்லை**

MATHIVATHANI VANANGAMUDI Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI Date: 2025.03.11 17:41:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.